முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1346

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.06.2023, செவ்வாய்கிழமை

1. தர்ம சக்திமிகு அரங்கா
   தரணிகாத்திடும் தேசிகா
   வறுமை விரட்டி உலகோர்க்கு
   வல்லமைபட ஜீவகாருண்யம் அருளும்
2. அருளுகின்ற அரங்கனே தர்மனே
   ஆறுமுகன் என் அவதாரனே உந்தனுக்கு
   பெருமைபட ஞான அறிவுரை ஆசி
   புகலுவேன் சுப்ரமணியப்பெருமான் யானும்
3. யானுரைக்க சோபகிருது விடைதிங்கள்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 23 ம் நாள், 06.06.2023, செவ்வாய்கிழமை)

   உயர்வாக அரங்கனுக்கு ஆற்றல் கூட
   ஞான அறிவுரை ஆசியாக உரைப்பேன்
   ஞாலமதில் அரங்கனே கலியில் சிறந்த ஞானி
4. ஞானியரின் உண்மை வழி உலகமெங்கும்
   ஞானமாகப் பரவி நின்றிடவே
   ஞானலோக ஆட்சி மாற்றம்
   ஞான யுகமாற்றமாகவும் கண்டு தேறும்
5. தேறவே அரங்கன் தொண்டர்கள்
   தெய்வீக இந்த உயர் பணியை
   மாற்றம் குறித்து அவசியம் உலகமெல்லாம்
   மகான் அரங்கர் கொள்கையாக கொண்டு செல்ல வேண்டும்
6. வேண்டிவேண்டி அரங்கன் வழி சேவை
   விடாது செய்யும் அன்பர்கட்கு
   தண்டாயுதன் என் அருளும் தயவும்
   தக்கபடி உகந்தகாலம் வந்து சேர்ந்து

7. சேர்ந்துமே அவர்களெல்லாம் இனி பிறவா
சிறப்பறிவு கூடி இந்த கலியுகத்தில்
கலியுகத்தில் ஞானிகளாவது உறுதியப்பா
கருணைகொண்டு கந்தவேலன் அவர்கட்கு துணை நின்று
8. நின்றுமே அன்னவர்கள் அனைத்து சேவையையும்
நிலவுலகில் நிலைத்து நிற்க அருள்புரிவேன்
தொண்டுவழி வந்த மக்களெல்லாம் தூயவர்களாகி இந்த உலகிலே
வினை வென்று அவர்களெல்லாம் ஞானிகளாக அரங்கன்வழி தேறுவது
உறுதிஉறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–